பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 09 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. **Seychelles** நாட்டுடன் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்து செயல்பட இந்தியா தயாராக இருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. உலகளாவிய பொருளாதார நெருக்கடியின்போதிலும், நாட்டின் பொருளாதாரம் அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி **7** புள்ளி **8** சதவீதத்தை எட்டியதில் சிறு-குறு நிறுவனங்களின் பங்கு முக்கியமானது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

4. வாகன உற்பத்தித்துறையில் இந்தியா உலகிலேயே முன்னணி நாடாக உருவெடுக்க உள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>>

**Seychelles** நாட்டுடன் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்து செயல்பட இந்தியா தயாராக இருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் **Seychelles** பேரவைத் தலைவர் **Azarel Ernesta**-வுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாடாளுமன்ற செயல்பாடுகள் குறித்து பேசியதாக கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே நாடாளுமன்ற செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவது குறித்து ஆலோசனை நடத்தியதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

உலகளாவிய பொருளாதார நெருக்கடியின்போதிலும், நாட்டின் பொருளாதாரம் அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், பெல்ஜியம் பிரதமர் **Bart De Wever**-வுடன் ஆலோசனை மேற்கொண்டபின் வெளியிட்டுள்ள அறிக்கையில், இருநாடுகளுக்கு இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

உலகளாவிய பிரச்சினைகள் மூலம் உணவு, எரிசக்தி உற்பத்தி பாதிப்படைந்துள்ளதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7 புள்ளி 8 சதவீதம் எட்டி சாதனை படைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா — பெல்ஜியம் இடையே ஜனநாயக அடிப்படையில் பொருளாதாரத்திலும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் காக்கி நாடாவில் இருநாடுகளும் இணைந்து உலகிலேயே மிகப்பெரிய பசுமை அமோனியா திட்டத்தை செயல்படுத்தி வருவதாக கூறியுள்ளார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் இந்தியாவும் — பெல்ஜியமும் இணைந்து செயல்படுவதற்கு பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம் பிரதமர் **Bart De Wever** வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து வருவதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி 8 சதவீதத்தை எட்டியதில் சிறு-குறு நிறுவனங்களின் பங்கு முக்கியமானது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், தேசிய கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், இந்தியா பல்வேறு நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக கூறினார்.

இதன்மூலம், நாட்டின் ஏற்றுமதி அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில்கள் மத்திய அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு பியூஷ்கோயல் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தில்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம், சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மாநில அரசுகள் சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்காக, மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக இருப்பதாக திரு புபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

சட்ட மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பார் கவுன்சிலுக்கு இல்லை என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதிகள் **Joymalya,** மோகனா அடங்கிய அமர்வு இதுதொடர்பான உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஹைதராபாத் **Nalsar** சட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பார் கவுன்சில் மேற்கொண்ட நடவடிக்கை மீது விசாரித்த உச்சநீதிமன்றம், இந்த தீர்ப்பை அளித்துள்ளது.

சட்ட மாணவர்கள் வழக்கறிஞர்களாக பதிவு செய்த பின்னரே, அவர்கள் பார் கவுன்சில் நெறிமுறைகளுக்கு கட்டுப்படுவதாக உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

**Nalsar** பல்கலைக்கழக சட்ட மாணவர்களை வழக்கறிஞர்களாக பதிவு செய்ய வேண்டாம் என்று பார்கவுன்சில் உத்தரவு பிறப்பித்ததையடுத்து, உச்சநீதிமன்றம் இந்த தீர்ப்பை அளித்துள்ளது.

<<<<<<>>>>>>>

வாகன உற்பத்தித்துறையில் இந்தியா உலகிலேயே முன்னணி நாடாக உருவெடுக்க உள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இந்திய வாகன உற்பத்தியாளர் சங்கத்தின் வருடாந்திர கூட்டத்தில் உரையாற்றிய அவர், நாட்டின் வாகன உற்பத்தித் துறை 22 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

சென்ற நிதியாண்டில் வாகன ஏற்றுமதி 24 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாலை பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறிய அவர், வாகன உரிமங்களை வழங்க பல்வேறு நெறிமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வாகன ஓட்டுநர்கள் சாலை போக்குவரத்து விதிமுறைகளை தொடர்ந்து மீறினால் ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் திரு நிதின் கட்கரி எச்சரிக்கை விடுத்தார்

<<<<<<>>>>>>>

பள்ளி மாணவர்களிடையே அறிவியல் கற்கும் ஆர்வம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான படைப்பாற்றலை ஊக்குவிக்கும் Atal

**Tinkering** ஆய்வகங்கள் திட்டத்தின்கீழ், மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் சார்பில், அரியலூரில் செயல்முறை விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய விஞ்ஞானி திரு மகேஷ்வரன், இந்த செயல் விளக்கம் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமையும் என்று கூறினார்.

*(Sound Byte — மகேஷ்வரன் -24 Sec. )*

விஞ்ஞானிகள் அளித்த செயல் விளக்கங்கள் தங்களின் அறிவியல் ஆர்வத்தை தூண்டியுள்ளதாக பயிற்சியில் கலந்துகொண்ட மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

*(Sound Byte —மாணவர் - 34 Sec.* )

<<<<<<>>>>>>

ராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் வழங்குவது தொடர்பாக இந்திய ராணுவம் டேராடூனில் உள்ள ஒருங்கிணைந்த மருத்துவக்கல்லூரி குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, ராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு கல்விக்கட்டணத்தில் சலுகை அளிக்கப்படும்.

ராணுவ வீரர்களின் குடும்பத்தினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் மழை வெள்ளம் தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி, அம்மாவட்ட ஆட்சியருடன் தொலைபேசி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

கங்கை ஆற்று ஓரங்களில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்கள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

தாழ்வான இடங்களில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், ஃபருகாபாத் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை வான்வழியாக பார்வையிட்டார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தின் 32 மாவட்டங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

பீகாரில் தொடர் கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கங்கை ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பாட்னா, வைஷாலி, நாலந்தா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

கங்கை ஆற்றின் கரையோரம் மக்கள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் பல்வேறு ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

**Subarnarekha** ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜம்ஷெட்பூர், ராஞ்சி உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

ராம்கர் மாவட்டத்தில் பல்வேறு வீடுகள் மழை வெள்ளம் புகுந்துள்ளது.

தாழ்வான பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாவட்ட நிர்வாகங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

<<<<<<<>>>>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-17, 22-24, 21-9** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Christo Popov — Toma Junior** இணையை வென்றது.

**------------------**

அல்மாட்டி டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Diya Chitale — Yashaswini Ghorpade** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **11-8, 10-12, 11-6, 11-9** என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **Valeria — Maria Panfilova** இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் **Syndrela Das — Sutirtha Mukerjee** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Manush Shah - Diya Chitale** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<<END>>>>>>>>**